## அரசின் வகைகள்

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் உலக அரசுகள், முதலாம் மண்டல அரசுகள், இரண்டாம் மண்டல அரசுகள், மூன்றாம் மண்டல அரசுகள் எனப் பொதுவாக மூன்றாக வகைப்படுத்தப்படுகின்றன. இம்மூன்று பதங்களும் ஒரே கருத்தினைக் கொண்டவைகளல்ல. மேலும், உலகம் இரண்டு முகாம்களாகப் பிளவுபட்டன. ஒன்று நேட்டோ அணிகள் என்றும், மற்றையது வோர்சோ அணிகள் எனவும் அழைக்கப்பட்டன. இவ் அணிகள் மேற்கு நாடுகளின் முகாம், கிழக்கு நாடுகளின் முகாம் எனவும் அழைக்கப்பட்டன. 1952 ஆம் ஆண்டு குடித்தொகை ஆய்வாளர் அல்பிறட் சாவி (Alfred Sauvy) மூன்றாம் மண்டலம் என்றதொரு புதிய வகைப்பாட்டினை உருவாக்கியிருந்தார்.




மூன்று மண்டலங்களும் கெடுபிடி யுத்த காலப்பகுதியில் உருவாக்கப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு மண்டலங்களும் தமக்கான கூட்டுக்களையும் கொண்டிருந்தன. சில அரசுகள் இம்மூன்று அணிகளுடன் கூட்டுச் சேராதவைகளாக இருந்தன. சுவிற்சர்லாந்து, சுவீடன், அயர்லாந்துக் குடியரசு போன்ற அரசுகள் நடுநிலையரசுகளாக இருந்தன. பின்லாந்து சோவியத் யூனியனின் செல்வாக்கிற்குட்பட்ட நாடாக இருந்தாலும், கம்யூனிஸ முகாமிலோ அல்லது வோர்சோ அணியிலோ சேர்ந்திருக்கவில்லை. யூகோஸ்லேவேக்கியா நடுநிலைக் கொள்கையினைக் கொண்டிருந்ததுடன், அணிசேரா இயக்கத்தின் ஆரம்ப கால உறுப்பு நாடாகவும் இருந்தது.இரண்டாம் மண்டல நாடுகள் சோவியத் யூனியனின் செல்வாக்கிற்குட்பட்ட கம்யூனிச நாடுகளைக் குறிக்கின்றது.

கெடுபிடி யுத்தம் பூமியை மூன்றாகப் பிரித்து ஒரு பகுதியை முதலாம் மண்டலம் எனவும், இரண்டாம் மண்டலம் எனவும் மூன்றாம் மண்டலம் எனவும் அழைத்துக் கொண்டது. ஆயினும் சீனா, வியட்நாம் தென்னாசிய, கிழக்கு ஆசியக் கம்யூனிச நாடுகள் என்பனவும் மூன்றாம் மண்டல நாடுகள் என்றே அழைக்கப்பட்டன. சோவியத் யூனியனின் சிதைவிற்குப் பின்னர் ரஸ்சியாவும், ஏனைய அதன்

கூட்டு நாடுகளாகிய கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் முதலாம் உலக நாடுகளுக்குள் இணைத்துக் கொள்ளப்பட்டன.

**குறைவிருத்தி நாடுகள்**

குறைவிருத்தி நாடுகள் *(Least Countries)* என்பது ஐக்கிய நாடுகள் தாபனத்தின் கருத்தின்படி சமூக, பொருளாதார அபிவிருத்தியிலும், மனித அபிவிருத்தி சுட்டியிலும் மிகவும் குறைவான அளவீடுகளைக் கொண்டிருக்கும் நாடுகளாகும். குறைவிருத்தி நாடாக ஒரு நாடு வகைப்படுத்தப்படுவதற்குப் பின்வரும் மூன்று விடயங்கள் அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றன.

1. 750 கூ குறைவான தலா வருமானத்தினைக் கொண்டிருக்கும் குறைந்த வருமானமுடைய நாடுகளாகும். இந்நாடுகளின் தலாவருமானம் 900 $ அடையும் போது இப்பட்டியலிலிருந்து நீக்கப்படும்.
2. போசாக்கு, சுகாதாரம், கல்வி, வயது வந்தோர் கல்வி போன்ற மனித வளக் குறிகாட்டிகள் பலவீனமாக இருத்தல்.
3. பொருளாதாரப் பலவீனம், இது விவசாய உற்பத்தி, பொருட்களின் சேவைகளின் ஏற்றுமதி போன்றவற்றில் பலவீனமாக இருத்தல். மரபுசாராப் பொருளாதாரச் செயற்பாடுகளின் முக்கியத்துவம், வர்த்தகப் பொருட்களின் ஏற்றுமதி, சிறு பொருளாதாரப் பொருட்களின் குறைபாடுகள், இயற்கை அனர்த்தங்களினால் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான மக்கள் இடம்பெயருதல் போன்றவைகள் காணப்படும்.




ஆட்சியாளனின் அரசியல் சாராம்சத்தினைப் பொறுத்து அரசுகள் ஒன்றிலிருந்து ஒன்று பல விடயங்களில் வேறுபட்டனவாகும். அதாவது அரசுகளுக்குள் பல ஒற்றுமைகளும், வேற்றுமைகளும் காணப்படுகின்றன. சமயம், கலாசாரம், மொழி, மக்கள் வாழ்வதற்குரிய பிரதேசம்,பொதுமக்கள் என்பவைகள் அரசுகளுக்குரிய சட்டபூர்வமான தன்மையினை வழங்குகின்றன.

அனேகமாக உலகத்திலுள்ள எல்லா பழைய அரசுகளும் பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்டு வேறுபடுத்தப்பட்டன. பிரதேசங்கள் அரசுகளுக்கான தெளிவான கலாசாரத்தினையும், சட்டபூர்வத்தன்மையினையும் வழங்குகின்றன.

ஆயினும் இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் ஆசிய, ஆபிரிக்கக் கண்டத்திலுள்ள அனேக அரசுகள் தெளிவான பிரதேசங்கள் அல்லது இயற்கையான புவியியல் எல்லைகளைக் கொண்டிருக்கவில்லை.பதிலாக மொழி,கலாசாரம்,சமயம் மக்களின் பிறப்பு என்பன முதன்மையான அடையாளங்களாக்கப்பட்டன. இதனால் பிரதேச எல்லைகள் செயற்கையானது என மக்கள் நம்பினர்.

பிரதேச,கலாசாரா அடிப்படையில் தேசிய அரசுகளுக்கிடையில் வேறுபாடுகள் காணப்பட்டாலும், இவற்றினைக்கடந்து எல்லாஅரசுகளும் சட்டப்படி ஒன்றிற்கொன்று சமமானவைகளாகவே கருதப்படுகின்றன.

**தோல்வியடைந்த அரசுகள்**

தோல்வியடைந்த அரசுகள் என்பது இறைமையுடைய அரசாங்கங்கள் சில அடிப்படையான விடயங்களையும், பொறுப்புக்களையும் பேணுவதில் தோல்வியடைகின்ற போது இவ்வாறான அரசுகளை அரசியல் விமர்சகர்களும், பத்திரிகையாளர்களும் தோல்வியடைந்த அரசுகள் என அழைக்கின்றார்கள். இவ்வாறான அரசுகள் பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கின்றன.

1. பிரதேசத்தின் பௌதீகக் கட்டுப்பாட்டினை அல்லது பிரதேசத்தின் சட்டபூர்வத் தன்மையினை இழந்திருக்கும்.
2. சட்டபூர்மான கூட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட முடியாமல் இருக்கும்.
3. நியாயமான பொதுச் சேவையினை வழங்க முடியாதிருக்கும்.
4. சர்வதேசச் சமூகத்திலுள்ள ஏனைய அரசுகளுடன் முழுமையான உறவுகளைப் பேண முடியாதவைகளாக இருக்கும்.



பொதுவாக தோல்வியடைந்த அரசுகளின் பண்புகளாக மத்திய அரசாங்கம் பலவீனமானதாக இருப்பதுடன், தனது பிரதேசத்தில் கட்டுப்பாட்டினை சிறப்பாகப் பேண முடியாதவைகளாகவும் காணப்படும். மேலும், பொதுச் சேவையினைச் சிறப்பாக வழங்க முடியாததுடன், ஊழல், குற்றச் செயல்கள், அகதிகள், பொருளாதார வீழ்ச்சி என்பவைகளை இந்நாடுகள் கொண்டிருக்கும்.

**சமகால ஏழுவகை அரசுகள்**

சமகால அரசமுறைமையில் காணப்படும் அரசுகள் சமூக, பொருளாதார, அரசியல் அடிப்படையில் ஏழு வகையாகப் பிரிக்கப்படுகின்றன.

**தாராண்மை ஜனநாயக அரசுகள்சூ-**

தாராண்மை ஜனநாயகம் சட்டரீதியானதும், வரையறுக்கக்கூடியதும், எதிர்ப்புக் கூறக்கூடியதுமான அரசியல் முறைமைகளையும், நிறுவனங்களையும் கொண்டிருக்கும். வழமையாக இவ் அரசுகள் உலகிலுள்ள ஏனைய அரசுகளைப விட சொத்துடைய அரசுகளாகக் காணப்படும். சிவில் உரிமைகள் மக்களுடைய பொருளாதாரங்கள் போன்றவற்றிற்கு ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது உயர் அந்தஸ்த்தும், அங்கீகாரமும் வழங்கப்பட்டிருக்கும். அனேக தாராண்மை ஜனநாயக அரசுகள் முதலாம் மண்டல நாடுகளாகவும் காணப்படுகின்றன. உதாரணமாக அவுஸ்திரேலியா, பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, யப்பான் போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம்.



**கம்யூனிஸ,கம்யூனிசத்திற்கு பிந்திய அரசுகள் –**

இவ்வகைப்பாட்டிற்குள் வரும் அரசுகள் "நிலைமாறும் அரசுகள்" என அழைக்கப்படுகின்றன. ஆனால் இவ் அரசுகள் எப்போதும் மாக்சிச–லெனினிச பொருளாதார, அரசாங்க முறையுடன் தொடர்புடைய அரசுகளாகும். இவ் அரசுகளில் பல கெடுபிடி யுத்தத்தின் பின்னர் கம்யூனிசத்திலிருந்து விடுபட்டுள்ளன. அனேகமான கம்யூனிச அரசுகள் ஏனைய அரச முறைமைக்குள், அதாவது தாராண்மை ஜனநாயகம், புதிய கைத்தொழில் வளர்ச்சியடைந்த அரசுகள், இஸ்லாமிய அரசுகள் போன்றவற்றுடன் இணைந்து கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. ரஸ்சியா, போலந்து, வட கொரியா, கியூபா, வியட்நாம் போன்ற முன்னைய இரண்டாம் மண்டல நாடுகள் இதற்கு சிறந்த உதாரணமாகும்.




**புதிதாக கைத்தொழில் மயமாகும் அரசுகள்சூ**

பதினெட்டாம்,பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் ஏற்பட்ட அனுபவங்களைப் போன்ற சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களைப் பெற்று கைத்தொழில் மயமாகி வரும் அரசுகளே இவைகளாகும். இந்நாடுகளின் அரசியல் முறை உறுதியடைந்து வருவதுடன், படிப்படியான கைத்தொழில் பொருளாதாரத்தினை நோக்கி வளர்ந்து வரும் அரசுகளாகும். உதாரணமாக மெக்சிக்கோ, இந்தியா, பிரேசில், துருக்கி, ஆர்ஜன்ரீனா போன்ற நாடுகளை உதாரணமாக கூறலாம்.




**குறைவிருத்தியுள்ள அரசுகள்**

அமெரிக்க கண்டத்தின் மத்திய, தென்பகுதிகளிலும், ஆபிரிக்காவின் சகாரப் பிரதேசத்திலுள்ள அரசுகள் குறைவிருத்தி அரசுகள் என அழைக்கப்படுகின்றன. இவ் அரசுகளில் சில சமூக,

பொருளாதார, அரசியல் உறுதிப்பாட்டினை கொண்டிருப்பினும், நீண்ட காலமாக தீர்க்க முடியாத பல பிரச்சினைகளைக் கொண்டிருக்கின்றன. சில அரசுகள் உறுதியான அரசியல் முறைமையினைக் கொண்டிருப்பதுடன், பொருளாதார வறுமையினையும் கொண்டிருக்கின்றன. சில அரசுகள் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்தாலும், மனித உரிமை மீறல்கள், ஊழல் போன்ற விடயங்களால் உறுதியற்ற அரசாங்கத்தினைக் கொண்டுள்ளன. இதற்கு உதாரணமாக ஈகுவாடோர், தன்சானியா, நைஜீரியா, நிக்கரகுவா போன்ற அரசுகளைக் கூறலாம்.




## 1. இஸ்லாமிய அரசுகள்

இவ் அரசுகளில் இஸ்லாமிய சமயத்தின் ஆதிக்கத்தினை அவதானிக்கலாம். அரசியல் நிறுவனங்கள், சமூகப் பொருளாதார விழுமியங்கள் எல்லாவற்றிலும் இஸ்லாமிய சமய நம்பிக்கைகள் இவ் அரசுகளில் காணப்படும். இதற்கு உதாரணமாக ஈரான், சவூதி அரேபியா, பாகிஸ்தான் போன்ற அரசுகளைக் கூறலாம்.




## ஓரங்கட்டப்பட்ட அரசுகள்

எல்லா அரசுகளும் இவ்வகைப்பாட்டிற்குள் வரக்கூடியவைகளாகும். சர்வதேச அரச முறையினுள் அரசுகள் இந்நிலையினை அடைகின்ற போது “தோல்வியடைந்த அரசுகள்” என இவைகள் அழைக்கப்படுகின்றன. ஒரு அரசு தோல்வியடைந்த அரசாக மாறுவதற்கு யுத்தம், இயற்கை

அனர்த்தம், அரசியல் அல்லது பொருளாதார ரீதியான தனிமைப்படுத்தலால் அரசியல், பொருளாதார சமூக மாற்றங்களுக்கு உள்ளாகின்றன. இதற்கு உதாரணமாக அங்கோலா, லைபீரியா, ஆப்கானிஸ்தான், எதியோப்பியா, சோமாலியா, மியன்மார் போன்ற அரசுகளைக் கூறலாம்.




**சிறிய அரசுகள்**

உலகில் உள்ள ஏனைய அரசுகளுடன் ஒப்பிடுகையில் இவ்வரசுகளின் “புவியியல் அளவு” மிகவும் சிறியதாக உள்ளது. இவ் அரசுகளின் மக்களின் தொகை 50,000 இருந்து 250,000 வரையிலேயே காணப்படுகின்றது. இயற்கை வளங்கள், பாதுகாப்பு, வர்த்தகம் போன்றவற்றிற்கு அயல்நாடுகளில் தங்கியிருக்கின்ற நாடுகளாகும். உதாரணமாக லக்சம் பேர்க், வகமாஸ், வாவடோஸ், மொனாகோ, வத்திகான் போன்ற அரசுகளைக் கூறலாம்.




**நான்காம் மண்டல நாடுகள்**

ஆர்.ஜி. றிட்கெர் *(R.G.Ridker)* 1976 ஆம் ஆண்டு நான்காம் உலகத்தின் மாறும் வளப்பிரச்சினை *(Changing Resource Problems of the Fourth World)* என்னும் பெயரில் வெளியிட்ட கட்டுரையில்

நான்காம் உலகம் என்னும் பதத்தினைப் பயன்படுத்தியிருந்தார். ஆயினும் இப்பதம் பொருளியலாளர்கள் மத்தியில் அதிக முக்கியத்துவம் பெற்றிருந்தது.

ஆயினும், 1972 ஆம் ஆண்டு பென் விற்ரெக்கர் *(Ben Whittaker)* சிறுபான்மை இனக்குழுக்களை அழைக்க இப்பதத்தினைப் பயன்படுத்தியிருந்தார். ஆயினும்இன,சமூக,வரலாற்றுக் குழுக்களிற்கிடையிலான வேறுபாட்டினை இனம்காண இவர் தவறிவிட்டார் எனக் கூறப்படுகின்றது.

பேர்னாட் கியூ நீட்ச்மன் *(Bernard .Q.Niertschmann)* என்பவர்

> "சர்வதேச அரசியலில் புதியதொரு சக்தியாக நான்காவது மண்டலம் என்றதொரு புதிய வகைப்பாடு படிப்படியாக எழுச்சியடைந்து வருகின்றது. பொதுவான பாதுகாப்பு, சர்வதேசச்சட்டம், அரசஇறைமை, பணிக்குழு மீதான நம்பிக்கை போன்றவற்றை அனேக சுதேசிய மக்கள் ஏற்றுக்கொள்வதில்லை. பதிலாகத் தங்களைத் தாங்களே ஒழுங்கமைத்து தங்களது பங்குபற்றுதலையும், இறைமையையும் பிரயோகிக்கின்றார்கள்."எனக் கூறுகின்றார்.

மேலும் இவர் "மூன்றாம் உலகம் நான்காம் உலகத்தின் மீது புவியியல் யுத்தத்தினைப் பிரகடனப்படுத்தியுள்ளது. இப்பூகோள முரண்பாட்டிற்கு முதலாம்,இரண்டாம் உலக அரசுகள் உதவுகின்றன."எனக் கூறுகின்றார்.

றிச்சாட்ஸ் கிறிக்ஸ் *(Richard Griggs)*

> "சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்படத் தகுதியில்லாத தேசங்களே நான்காம் உலகமாகும். உலக சனத்தொகையில் 5000 தொடக்கம் 6000 வரையில் பிரதிநிதித்துவம் வகிக்கும் மக்களும் தாங்கள் வாழும் அரசிற்குள் தனியான அரசியல் கலாசாரத்தினைப் பேணிக்கொள்வதுடன், தாம் வாழும் பிரதேசம் தமக்குச் சொந்தமானது என உரிமை கொண்டாடுவதுடன், இறைமைக்காகப் போராடுவது அல்லது கணிசமானளவு சுயாட்சியைத் தமது பிரதேசத்தில் பெற்றுக்கொள்வதற்கும் போராடுகின்றார்கள்" எனக் கூறுகின்றார்.

அனேக சந்தர்பங்களில் சுதேசிய மக்கள் சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தினை நடாத்தி தமது அரசியல் குரலையும் ஐக்கியத்தினையும் பிரகடனப்படுத்துவதுடன், தங்களுடைய பொருளாதார,கலாசார,சமூக அபிவிருத்தியையும் தக்கவைத்துக்கொள்கின்றார்கள்.
சமாதானத்தை நேசித்தவர்கள் எதிர்காலத்தில் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட தேசங்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படாமலிருப்பதற்காக ஒவ்வொரு தேசத்திற்கும் தனியான தேசிய அரசுகளை உருவாக்க முயற்சித்தார்கள். ஆனால் இவ்வாறு செய்வது இலகுவானதல்ல.

தேசிய அரசொன்றிற்குள் பல தேசங்கள் வாழ்கின்றன.மொழி, தேசியம், சமயம் என்ற சிக்கலான முறையில் இவர்கள் கலந்து காணப்படுகிறார்கள்.அவர்களைத் தெளிவான தேசங்களாப் பிரித்தெடுப்பது சிக்கலானதாகும். உதாரணமாக கிறீஸ்சில் பல்கேரியர்களும், பல்கேரியாவில்

கிரேக்கர்களும், யூகோஸ்லாவியாவில் ருமேனியர்களும், ருமேனியாவில் யூகோஸ்லேவியர்களும், செக்கோஸ்லேவியாவில் ஜேர்மனியர்களும் வாழ்கின்றார்கள்.

ஒவ்வொரு தேசிய அரசிற்குள்ளும் வாழும் தேசிய சிறுபான்மை இனத்தவர்கள் மத்தியில் எப்போதும் பெரும்பான்மை இனத்தவர் மீது அச்சவுணர்வு இருந்து வந்தது.வெளிநாட்டுச் சக்திகளின் உதவியுடன் ஒவ்வொரு தேசமும் சுய நிர்ணய உரிமையைக் கோரின. இச் சிக்கல்கள் எதிர்காலத்தில் உலக சமாதானத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் என்பதால், சர்வதேசச் சட்டம் மூலமாக ஒவ்வொரு தேசத்தினதும் சுயநிர்ணய உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அடிப்படை உரிமைகள் பேணப்பட வேண்டும் எனக் கூறப்பட்டது.

இச்சட்டத்தினடிப்படையில் போலந்து, ரூமேனியா ,யூகோஸ்லேவியா செக்கோஸ்லேவியா, கிறீஸ் போன்ற தேசிய அரசுகள் மொழி, இன, சமய சிறுபான்மைக் குழுக்களுக்கு சம உரிமைகளை வழங்கின.நீண்ட காலத்தில் இச் செயற்பாடுகள் உண்மையான சமாதானத்தினை வழங்கவில்லை. சிறுபான்மையோர் தொடர்பாக கொடுக்கப்பட்ட உறுதி மொழிகள் தமது இறைமையினை எதிர்காலத்தில் பாதிக்கலாம் என ஒவ்வொரு அரசும் அச்சம் கொண்டன.

இதனால் முரண்பாடுகள் தவிர்க்க முடியாத நிகழ்வாகின. அதனைத் தடுக்க சர்வதேசச் சங்கம் முயற்சித்ததாயினும், தவறு இழைப்பவர்களைத் தண்டிக்கக் கூடிய அதிகாரத்தினைப் பெற்றிருக்கவில்லை.

இன முரண்பாடுகள் உச்சக்கட்டத்தையடைவது தவிர்க்க முடியாததாகியது. கங்கேரி ,ரூமேனியாவில் யூதர்களும்,போலந்தில் உக்ரேனியர்களும் பாதுகாப்பற்ற நிலையிலிருந்ததுடன்,மிகவும் பாதிக்கவும்பட்டனர். தேசிய விரோத உணர்வும்,இனக்கிளர்ச்சியும் எழுச்சியடைந்தன.''சிறுபான்மையினர் பாதுகாப்பு என்ற கோட்பாடு'' சிதைக்கப்பட்டது.

ஜேர்மனியில் இன உணர்வலைகள் எழுச்சியடைந்தது. நாசிசம் வளர்ச்சி பெறலாயிற்று. யூதர்கள் துன்புறுத்தப்படலாயினர். இது ஜேர்மனியின் தேசியவாத இயல்பாக வெளிக்காட்டப்பட்டது. சிவில் சேவை தனியார் துறை,இராணுவம் ஆகிய துறைகளிலிருந்து யூதர்கள் அன்னியப்படுத்தப்பட வேண்டும் எனச் சட்டம் கொண்டுவரப்பட்டது. சமூகப் பொருளாதாரத்தடை என்பது யூதர்களுடைய வாழ்வில் பெரும் கஸ்டத்தினை ஏற்படுத்தியது. இதனால் ஜேர்மனியை விட்டு யூதர்கள் ஆயிரக்கணக்கில் வெளியேற வேண்டியேற்பட்டது. இதுவே யூதத் தேசியவாதம் வளர்வதற்கும்,பாலஸ்தீனத்தில் இஸ்ரவேல் என்ற பதிய அரசு யூதர்களுக்காக உருவாக்கப்படவும் காரணமாக அமைந்தது.உலகளாவிய ரீதியில் அரசின்றி வாழும் தேசிய சிறுபான்மையின மக்களையே நான்காம் மண்டலம் என அழைக்கின்றார்கள்.

**1990 பின்னரான மாற்றம்**

சோவியத் யூனியனில் ஏற்படுத்தப்பட்ட மறுசீரமைப்பும்,வளைகுடாப்போரும் புதிய தேசிய அரசுகளின் தோற்றத்திற்குக் காரணமாக இருந்தது. வோர்சோ ஒப்பந்த அணி கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து

கிழக்கைரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட புரட்சிகள் மீண்டும் மக்கள் இறைமையினை வேண்டி நின்றன. மக்கள் தமக்கு ஏற்ற ஆட்சிமுறையினை உருவாக்கிக் கொண்டார்கள்.

யூகோஸ்லேவியாவில் சிலோவேனிய மக்களும்,குரோசிய மக்களும் தனியரசு கோரிப் போராட்டம் நடாத்தினர். போஸ்னியாவில் சேபியர்களுக்கும், இஸ்லாமியர்களுக்குமிடையில் யுத்தம் நிகழ்ந்தது. சோவியத்யூனியனில் இணைந்திருந்த 15 குடியரசுகளில் 10 குடியரசுகள் தனியரசாகிச் சென்றதுடன் அதனை உலக நாடுகள் அங்கீகரித்தும் கொண்டன.




ஏகாதிபத்திய நலன்களுக்கான போர்களும், சுயநிர்ணய உரிமைகளுக்காக சிறுபான்மையினர் நடாத்தும் கிளர்ச்சிகளும் தேசிய அரச முறைமைகளை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளன.

சர்வதேச ஒழுங்கில் மாற்றம் ஏற்பட்டால்தான் தேசிய அரசுகளுக்கு பாதுகாப்பை வழங்க முடியம் என வாதிடுகின்றார்கள். தேசியவாதிகள் தங்கள் கொள்கைகளைக் கைவிடுவதிலும் பார்க்கத் தங்களுக்கும், தங்கள் ஆதரவாளர்களுக்கும் ஏற்படும் கஸ்டங்களையும், அழிவுகளையும் ஏற்கத்தயாராக இருக்கின்றார்கள்.

உலகம் எங்கும் இன அடிப்படையில் பிரிவினைக்கான கோரிக்கைகள் வளர்ச்சியடைந்து வருவதுடன், பலமான அழுத்தத்தினையும் கொடுத்து வருகின்றது.நன்கு ஸ்திரமான நிலையிலுள்ள அரசாங்கங்களை அரசியல் ரீதியாக சிதைத்து விடுமளவிற்கு இன முரண்பாடுகள் வளர்ச்சியடைந்து வருகின்றன.இங்கிலாந்தில் ஐரீஸ் மக்களின் போராட்டமும், இந்தியாவில் காஸ்மீர் மக்களின் போராட்டமும், இலங்கையில் தமிழ் மக்களின் போராட்டம் சிறந்த உதாரணங்களாகும்.

அரசியல் நல்லிணக்கத்தினையும் , அதிகாரப் பரவலாக்கத்தினையும் ஏற்படுத்தி தேசிய அரச முறைமையினைப் பாதுகாக்க ஐரோப்பிய சமூகம் முயற்சிக்கின்றது. ப்பிலேமிங்ஸ், வெலூன்ஸ் இன மக்களிற்குக் கலாசார சுயாட்சியை வழங்குவதற்கு பெல்ஜியம் தனது யாப்பினைத் திருத்தியுள்ளது.கனடா பிரெஞ்சு,ஆங்கிலம் பேசும் மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப தனது

அரசியலமைப்பைத் திருத்தியுள்ளது. இத்தாலி ஜேர்மன் மொழி பேசும் மக்களிற்காகத் தன்னாதிக்கமுள்ள மாகாண அரசொன்றை நிறுவியுள்ளது.

மறுபக்கத்தில் கைத்தொழிலடிப்படையில் அரசுகளுக்கிடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. சில அரசுகள் கைத்தொழிலிலும், தொழில்நுட்பத்திலும் மிகவும் முன்னேறியுள்ளன.

உலகத்திலுள்ள ஏனைய எல்லா அரசுகளையும் விட ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதாரம் மிகவும் பலமானதாகும்.ஆகவே கைத்தொழில் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு உலகிலுள்ள அரசுகளை கைத்தொழில் வளர்ச்சியடைந்த நாடுகள்,வளர்ச்சியடைந்து வரும் நாடுகள்,குறைவிருத்தி நாடுகள் எனப்பிரிக்கப்படுகின்றது.

கைத்தொழில் ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளின் கல்வித்தரம் மிகவும் உயர்ந்ததாகும்.ஆடம்பரப்பொருட்களுக்கான நுகர்வு மிகவும் அதிகமாகும். பிறப்பு, இறப்பு வீதங்கள் சமனிலையில் காணப்படும். மக்கள் மத்தியில் திருப்திகரமான அரசியல் விழிப்புணர்வு காணப்படுவதுடன் உள்நாட்டு,வெளிநாட்டு கொள்கைகளில் இவை செல்வாக்குச் செலுத்துவதாகவும் இருக்கும். இதற்கு உதாரணமாக ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா போன்ற நாடுகளைக் கூறிக்கொள்ளலாம்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் என்பது ஏற்கனவே அபிவிருத்தியடைந்த நாடுகளின் நிலையினை எட்டிப்பிடிப்பதற்கு பெரும் முயற்சிசெய்யும் நாடுகளாகும். இந்நாடுகள் கல்வியறிவின்மை,தொற்றுநோய்கள், அரசியல்உறுதிப்பாடின்மை, சர்வாதிகாரஆட்சி பற்றிய பயம், தொழில்நுட்பஅறிவுக்குறைபாடு, பொருளாதாரச்சுரண்டல் போன்ற பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன. இந்தியா, பாக்கிஸ்தான், எகிப்து போன்ற நாடுகளை இவ்வாறான நாடுகளுக்கு உதாரணமாகக் கூறலாம்.